**SL No: SIMTPB01**

**Code No: JL012021**

**SET: 01**

Roll No. | | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

| குறிப்பு | NOTE |
|---|---|
| (I) இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **23** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும். | (I) Please check that this question paper contains **10** printed pages. |
| (II) வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும். | (II) Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate. |
| (III) இந்த வினாத்தாளில் **16** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும். | (III) Please check that this question paper contains **14** questions. |
| (IV) எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும். | (IV) Please write down the Serial Number of the question in the answer-book before attempting it. |
| (V) வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது. | (V) 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period. |

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* — *மொ. மதிப்பெண்கள் : 80*

*Time allowed : 3 hours* — *Maximum Marks : 80*

பகுதி -அ (SECTION-A) 40 MARKS

1. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக 5 × 1 =5

**அ)** இல்வாழ்க்கை வாழ்வோர்க்கும் பொருள் தேடுவது ஒருகடமையாக இருக்கிறது .அதற்காக அவர்கள் பற்பல தொழில் கடமையாக வகைகளை மேற்கொண்டிருந்தார்கள். உழவு, வணிகம், நெசவு முதலியவை அத்தொழில்வகைகளில்சில. இங்கே மலைகளும் காடுகளும் கடற்கரைகளும் வளமாக இருக்கின்றன. வெற்று வெளிகளும் உண்டு அங்கங்கே இருந்த மக்கள் அவ்வவிடங்களுக்குக்குத் தக்க தொழில் முறைமைகளை உன்னித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள் .மலைப்பக்கங்களில் இருப்பவர்கள் தேனெடுப்பது திணை விதைப்பது, கிழங்ககழ்வது முதலிய தொழில்களையும் வயலிடங்களில் இருப்பவர்கள் உழவு செய்வது, நகரமைப்பது, ஆட்சி புரிவது முதலிய தொழில்களையும் கடற்கரைகளில் இருப்பவர்கள் முத்துக் குளிப்பது, உப்பு விளைப்பது மரக்கலத்திலேறி அலைகடலில் சென்று வாணிகம் செய்வது முதலிய தொழில்களையும் செய்து பொருள் தேடி வந்தார்கள். அறிவு முதிர முதிர இன்னும் எத்தனையோ வகையான தொழிகளை உணர்ந்து, வளம் மிகுந்து வாழ்ந்தனர்.

**வினாக்கள்**

i.இல்வாழ்க்கை வாழ்வார்க்கு எது ஒரு கடைமையாக உள்ளது?

அ) அறம் செய்தல் ஆ)பொருள் தேடுவது இ) மறம் செய்தல் ஈ) பொன்னைத் தேடுவது

ii.பொருள் தேட மக்கள் என்ன செய்தார்கள்?

அ) பற்பல வேலைகள் ஆ) பற்பல கைவினைத் தொழில்கள்

இ) பற்பல தொழில்கள் ஈ) ஈ) பற்பல கடமைகள்

iii. தொழில் வகைகள் யாவை?

அ) உழவு, வணிகம் மற்றும் சமையற்கலை ஆ) உழவு, வணிகம் மற்றும் பட்டு நெய்தனர்

இ) உழவு, வணிகம் மற்றும் முத்துக்குளித்தல் ஈ) உழவு, வணிகம் மற்றும் நெசவு

iv.மக்கள் எப்படி தொழில் கற்று கொண்டார்கள்?

அ) உன்னித்துப் பார்த்து ஆ) கவனித்துப் பார்த்து இ) பழகிப் பார்த்து ஈ) கவனமுடன் பார்த்து

v. வயலிடங்களில் இருப்பவர்கள் எத்தொழில் செய்தார்கள்

அ) உழவு, ஆட்சி புரிவது ஆ)உழவுத் தொழில் மட்டும்

ஆ) உழவு, நகரமைப்பு, ஆட்சி புரிவது ஈ) ஆட்சி புரிவது மட்டும்

**(அல்லது)**

**ஆ**. நாம் வாழும் இன்றைய சமுதாயத்தில் தோன்றும் அரசியல், பொருளாதார, சமுதாய சமயச்சிக்கல் பொரும்பாலான மக்களை மூச்சுத் திணறச் செய்கின்றன வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து பலர் சோர்ந்து விடுகின்றனர். இறைவன் மீது அசையா நம்பிக்கை கொண்டு சோதனைகளைக் கண்டு அஞ்சாமல் செயல்படுவர்கள்; வாழ்க்கையை ஓர் அரும்பெரும் சாதனையாக மாற்றிக் கொள்ள முடியும். இதற்கு மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு முன்பு எப்பொழுதும் இருந்ததைவிட இப்பொழுது மகாத்மாவின் வாழ்க்கையை அறிந்துக் கொள்ளும் ஆர்வம் மக்களிடம் மிகுந்திருக்கிறது. ஆங்கிலத்தில் வெளிவந்த 'காந்தி என்ற திரைப்படம் உலக மக்களைத் தட்டி எழுப்பியிருக்கின்றது. இப்படியும் ஒருவர் வாழ்ந்தாரா? என்ற கேள்வி எங்கும்

எதிரொலிக்கின்றது. அகிம்சை சத்தியம் என்ற அடிப்படையில் கட்டப் பெற்ற கோபுரம் மகாத்மாவின் வாழ்க்கை அதனைத் திரும்பத் திரும்ப படிக்கும் பொழுது நமது வாழ்க்கையில் தெளிவு பிறக்கும். காந்தியடிகள் மறைந்து 70 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. அவர் கண்ட வகையில் பாரதநாடு இன்னும் உருவாகவில்லை. அதற்கு பாடுபட வேண்டும்

**வினாக்கள்**

i.எத்திரைப்படம் மக்களை தட்டி எழுப்பியது?

அ) உலக உத்தமர் காந்தி ஆ) அம்பேத்கர் இ) மகாத்மா காந்தி ஈ) காந்தி

ii.யாரால் வாழ்க்கையை சாதனையாக மாற்றி கொள்ள முடியும்?

அ) இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருப்பவர்

ஆ) இறைவன் மீது நம்பிக்கையில்லாதவர்

இ) இறைவன் மீது அசையா நம்பிக்கை கொண்டு இருப்பவர்

ஈ) இறைவன் மீது சிறிதளவு நம்பிக்கை கொண்டு இருப்பவர்

iii.மகாத்மாவின் வாழ்க்கை கோபுரம் எதன் அடிப்படையில் கட்டப் பெற்றது?

அ) உண்மை, நேர்மை ஆ) அகிம்சை , சத்தியம்

இ) விடாமுயற்சி ஈ) அகிம்சை , கடமை

iv.காந்தியடிகள் மறைந்து எவ்வளவு ஆண்டுகள் ஆயிற்று?

அ) 44 ஆண்டுகள் ஆ) 70 ஆண்டுகள் இ) 54 ஆண்டுகள் ஈ) அகிம்சை , கடமை

v.யாருடைய வாழ்க்கையை நாம் திரும்ப திரும்ப படிக்கும் பொழுது தெளிவு பிறக்கும்?

அ) மகாத்மாவின் வாழ்க்கை ஆ) காமராசரின் வாழ்க்கை

இ) அண்ணாவின் வாழ்க்கை ஈ) நேருவின் வாழ்க்கை

**II. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக** 5 × 1 =5

**அ**)நாட்டில் வார்த்தைகளில் வருணிக்கமுடியாத, கண்டுகளிக்கக்கூடிய, கற்பனையும் கலைநயங்களும் கொட்டிக்கிடக்கும் ஆலயங்களும், மலைக்கோயில்களும். குடைவரைக் கோயில்களும் காணும் இடமெல்லாம் காட்சிதருகின்றன. காணவிரும்பும் அனைவரும் கண்டதும் பண்டைய மக்களின் கடின உழைப்பையும், கற்பனை வனப்பையும் பெற்றிருக்க முடியாது அத்தகைய வரலாற்றுக்கலைப்பெட்டகம் ஒன்றுதான் நெல்லையப்பர் திருக்கோயில் இக்கோயில் 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. நெல்லையப்பர் காந்திமதியம்மாள் இருவருக்கும் தனித்தனியே இருந்த கோயில் இல் வடமலையப்ப பிள்ளை என்பவரால் சங்கிலிமண்டபம் கட்டப்பட்டு இரண்டும் இணைக்கப்பட்டது. 14 ஏக்கர் பரப்பளவில் 850 அடி நீளம் 756 அடி அகலம் கொண்ட இத்திருக்கோயிலில் தாமிரசபை எனப்போற்றப்படும் நடராசர்கலை நடனக்கோலம் காணக் கண் கோடி வேண்டும். பாண்டிய மன்னர்களின் திருப்பணிகள் கல்லிலும் கலைவண்ணம் காட்டின. இசைத்தூண்கள் இக்கோயிலின் சிறப்பம்சமாகும். ஒரே கல்லில் பத்துத் தூண்கள் அவற்றின் வேறுபட்ட இசையொலிகள் சிற்பிகளின் கலைநயம் இசைநயம் கற்பனைநயம் ஆகியவற்றை வெளிப்படுத்துவன. படித்துணர்வது இன்பம் தரும் என்றாலும் பார்த்துணரும் பாங்குக்குக்கு ஈடாகுமோ

வினாக்கள்

i. நெல்லையப்பர் கோயில் எத்தனை ஆண்டுகள்பழமையானது ?

(அ) 300 ஆண்டுகள் (ஆ) 500 ஆண்டுகள் (இ) 1300 ஆண்டுகள் (ஈ) 2000 ஆண்டுகள்

ii.இக்கோயில் தூண்களின் சிறப்பம்சம் யாது?

(அ) ஒரே கல்லில் 10 தூண்கள், இசைநயம், கலைநயம் கற்பனைநயம்

(ஆ) ஒரே கல்லில் 5 தூண்கள் சிறியவை

(இ) கல்களால் ஆன கலை அழகுத் தூண்கள்

(ஈ)பல கற்களால் ஆன கலை நயமிக்க தூண்கள்

iii.இங்குவீற்றிருக்கும் அம்பாளின் பெயர் யாது ?

(அ) இந்துமதி (ஆ) சந்திரமதி (இ) கோமதி (ஈ)காந்திமதி

iv) கோயில் எத்தெனை ஏக்கர் பரப்பில் அமைந்திருக்கிறது ?

(அ) 10 ஏக்கர் (ஆ) 15 ஏக்கர் (இ) 7 ஏக்கர் (ஈ) 14ஏக்கர்

v.படித்துணர்வதிலும் இன்பம் தருவது எது?

(அ) நினைத்துணர்வது (ஆ) அப்படியே மறப்பது
(இ) பார்த்துணர்வது (ஈ) சோதித்து உணர்வது

**(அல்லது)**

**ஆ).**உலகில் உள்ள சுவையான மீன்களில் முதன்மையானது அலாஸ்காவின் தேசிய மீனான கிங் சால்மன் ஆகும். அலாஸ்கா அரசின் வருமானத்திற்கு அதிகமாக உதவும் இம்மீன் நல்லநீரில் உற்பத்தியாகிறது. பிறந்த சில மாதங்களில் பல்லாயிரம் மையில்கள் பயணம் செய்து கடலை அடைகிறது. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு பிறகு மீன்பிடிப்போர் பருந்துகளிடமிருந்து தப்பிபிழைத்து கூட்டம்கூட்டமாக அருவி கரடிகள் வேகம் எதிர்படும் போது மேல் நோக்கிப்பாய்ந்து செல்வது கண்ணுக்கினியதான காட்சியாகும். கிரிஸ்லிகரடிகள் மீன்பிடிக்கப்படும் பாடு மற்றொரு அரிய காட்சி. சால்மன் மீன் சுமார் 10000 முட்டைகள் இடும். இதற்காக நூற்றுகணக்கான மைல்கள் நீந்தவேண்டும். முட்டைகளைப் பெண்மீன்களும்ஆண்மீன்களும் காக்கும். பெரிய சால்மன் மீன்கள் பொறிந்த தன் பிறந்த குஞ்சுகளைப் பார்த்தபடியே இறந்து விடும்.

வினாக்கள்

i.அலாஸ்காவிற்கு வருமானத்திற்கு அதிகம் உதவுவது எது ?

(அ) அந்நாட்டு மக்கள் வரிப்பணம் (ஆ) தங்கம்
(இ) வைரம் (ஈ) கிங்சால்மன் மீன்கள்

ii. இவ்வகை மீன்கள் (கிங்சால்மன்) எங்கு உருவாகிறது ?

(அ) குளங்களில்(ஆ) கடலில் (இ) நல்லநீரில் (ஈ) கிணறுகளில்

iii.எவ்வகை மிருகம் இம்மீன்களை உண்ணும் ?

(அ) நீர்நாய்கள் (ஆ) கிரிஸ்லி கரடிகள் (இ) சிங்கங்கள் (ஈ)புலிகள்

iv.சால்மென் மீன்கள் சுமாராக எத்தனை முட்டையிடும் ?

(அ) 2000 (ஆ) 4000 (இ) 600 (ஈ) 10000

v.பெரிய சால்மன் மீங்கள் இறப்பு எவ்வாறு நிகழும் ?

(அ) எதிரிகளால் (ஆ)மீன்பிடிப்பவர்களால்
இ)வயதானதால் ஈ) பிறந்த தன்குஞ்சுகளைப் பார்த்தப்படியே.

---

3.சான்று தருக (எவையேனும் நான்கிற்கு மட்டும்) 4

i. செய்யுளிசை அளபெடை

அ) நல்லா படாஅ பறை ஆ)எடுப்பதூஉம் இ)வரனசைஇ ஈ)எங்ங்கிறைவன்

ii. பண்புத்தொகை

அ) இன்மொழி ஆ)வட்டத்தொட்டி இசெங்காந்தள் ஈ)சாரைப்பாம்பு

iii. எழுவாய்த்தொடர்

அ) பாடினாள் கண்ணகி ஆ) கேட்ட பாடல் இ)காவிரி பாய்ந்தது ஈ) பாடி மகிழ்ந்தனர்

iv. விடை வழு

அ) கண்ணன் எங்கே இருக்கிறார்?' என்ற வினாவிற் குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல்

ஆ) ஒரு விரலைக் காட்டிச் 'சிறியதோ ? பெரியதோ?' என்று கேட்டல்

இ) இரு விரல்களைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது?' என்று கேட்டல்

ஈ) கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார் என்று விடையளித்தல்

v. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

அ)'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

ஆ) 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர

இ) ஆலத்து மேல குவளை குளத்துள வாலின் நெடிய குரங்கு
ஈ) சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'.

4.**கூறியவாறு செய்க** (எவையேனும் நான்கிற்கு மட்டும்) 4

i. வீசுகின்ற காற்று (வினைத்தொகையாக்குக)
அ) வீசிய காற்று ஆ) வீசும்காற்று இ) வீசியது காற்று ஈ) வீசுகாற்று

ii. சூடு (தொழிற்பெயராக்குக)
அ) சுடு ஆ) சுடுதல் இ) சூடுதல் ஈ) சுட்டது

iii.கண்ணகி ( பெயரெச்சமாக்குக)
அ)கண்ணகின் படித்தாள் ஆ) படித்த கண்ணகி இ) கண்ணகி படித்தாள் ஈ)கண்ணகி படித்த

iv.தென்னந்தோட்டம் ( மரபு வழாநிலையாக்குக)
அ) தென்னந்தோப்பு ஆ) தென்னங்கொல்லை இ) தென்னங்காடு ஈ) தென்னஞ்சோலை

v.அலைகடல் ( பண்புபெயராக்குக)
அ) அலைகின்ற கடல் ஆ)அலையும் கடல் இ) அலைந்த கடல் ஈ) செங்கடல்

5. **இலக்கண குறிப்பு தருக** (எவையேனும் நான்கிற்கு மட்டும்) **4**

**i.** 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.
அ) மொழிமாற்றுப் பொருள்கோள் ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்
இ) ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஈ)தாப்பிசைப் பொருள்கோள்

**ii.** கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் போவேன் என்று உடன்பட்டுக் கூறல்---
அ) ஏவல் விடை ஆ) நேர் விடை இ) மறை விடை ஈ) சுட்டு விடை

**iii.** வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்----
அ) கொடை வினா ஆ)கொளல் வினா இ)ஏவல்வினா ஈ) ஐயவினா

**iv.** "கத்துங் குயிலோசை - சற்றே வந்து காதிற் படவேணும்"-
அ) மரபு வழுவமைதி ஆ)பால் வழுவமைதி இ) இட வழுவமைதி ஈ)திணை வழுவமைதி

**v.** நீ வந்தாய் என்பது ---
அ)இட வழாநிலை ஆ) பால்வழாநிலை இ) திணைவழாநிலை ஈ) மரபுவழாநிலை

**6. நிரப்புக (அனைத்து வினாக்களுக்கும் விடையளி) 4**

**i.** இலக்கணமுறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ----- எனப்படும்
அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) இடவழுநிலை

**ii.** குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்என்பது -----
அ) மரபு வழுவமைதி ஆ)பால் வழுவமைதி இ) காலவழுவமைதி ஈ)திணை வழுவமைதி

**iii.** வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல்-------
அ) வினா எதிர் வினாதல் விடை ஆ) இனமொழி விடை
இ) உறுவது கூறல் விடை ஈ) உற்றது உரைத்தல் விடை

**iv.** பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது-------------
**அ)** அறியா வினா ஆ)கொளல்வினா இ)ஐயவினா ஈ) கொடைவினா

**7.பின்வரும்செய்யுட் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய்வினாக்களுக்கேற்ற விடை எழுதுக 5**

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

**வினாக்கள்**

இயல் ,இசை ,நாடகம் என்பது ------
அ) முப்பால் ஆ) முப்பொருள் இமூவிடம் ஈ) முத்தமிழ்
இப்பாடலில் குறிப்பிடப்படும் சங்குகள் மொத்தம்
அ) 2 ஆ)3 இ)5 ஈ)4
மேற்கண்ட பாடலில் ஆழி என்பதன் பொருள்-----
அ) கடல் ஆ) மோதிரம் இ) சக்கரம் ஈ) மேகம்
இப்பாடலின் ஆசிரியர்------
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார் இ) உமாமகேஸ்வரி ஈ) சந்தக்கவிமணி
இப்பாடலில் குறிப்பிடப்படும் சிலேடை
அ) குதிரை கீரை ஆ) வைக்கோல் யானை இ) கடல் தமிழ் ஈ) பாம்பு எள்

**8 . பின்வரும்பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்றவிடையை எழுதுக.** (5)

தம்வீட்டுக்கு வரும் விருந்தினரை முக மலர்ச்சியோடு வரவேற்றுஉண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தவர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு.முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்அற உணர்வும் தமிழர் மரபும் திருவள்ளுவர் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே படைத்து உள்ளார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்.முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்கிறார்.

வினாக்கள்
i.உறவினர் -விருந்தினர் வேறுபாடு யாது?
ii.விருந்தோம்பல் என்றால் என்ன?
iii. விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியுள்ளது யாது?
iv. திருவள்ளுவர் விருந்தோம்பலை எவ்வாறு வலியுறுத்துகிறார்?
v. எதற்கு இல்லறம் என்கிறார் திருவள்ளுவர்?

**9.பின்வரும் குறட்பாக்களை சரியான சீர்களால் நிரப்புக** 4

**i.** வன்கண் --------- கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு
அ) பாதுகாத்தல் ஆ) குடிகாத்தல் இ) போற்றுதல் ஈ) அறிந்தக்

**ii.** அறனீனும் இன்பமும் ஈனும்-----------
தீதின்றி வந்த பொருள்.
அ) வலிமையறிந்து ஆ) திறமையறிந்து இ) திறனறிந்து ஈ) பொருளறிந்து

**iii.** தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும்-----------.
அ) பகைத்து ஆ) உலகு இ) பகைக்கு ஈ) அனைத்து

iv. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைதொன்
றுண்டாகச் ------- வினை
அ) வருவான் ஆ) தருவான் இ) எளியன் ஈ) செய்வான்

**10.செய்யுள்வினாக்கள் (இரண்டிற்கு மட்டும்)** 2 *3=6

அ) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக
ஆ) கம்பர் பற்றியும் கம்பராமயாணம் பற்றியும் எழுதுக
இ) கோவிலை விட்டு நீங்கிய காரணம் அறியாது மன்னன் இறைவனை எவ்வாறு வேண்டினார்?
ஈ) காற்றே வா கவிதையில் பாரதியார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக

**11.உரைநடைவினாக்கள் ( மூன்று வினாக்களுக்கு மட்டும்)** 3*4=12

அ) விருந்தோம்பலின் பண்பினை எழுதுக
ஆ) மாறிவரும் விருந்தோம்பல் முறை பற்றிய கருத்துக்களை தொகுத்து எழுதுக
இ) செயற்கை நுண்ணறிவு குறித்த தொழில் நுட்ப வரையறகளை விளக்குக
ஈ) எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவை எவ்வாறு பயன்படுத்தலாம்?

**12. துணைப்பாடம் (7) கட்டுரை வடிவில் எழுதுக**
அ) பாய்ச்சல் கதையினை எழுதுக

**13.கொடுக்கப்பட்டுள்ள காட்சியைக் கண்டு கவினுற எழுதுக 3**



**14.எதேனும் ஒரு கடிதம் எழுதுக 6**
அ) உனது பகுதியில் மின்சாரம் தடைபடுவதைத் தவிர்க்க கோரி மின்சார வாரிய ஆணையருக்கு கடிதம் எழுதுக
ஆ) மேனிலைப் படிப்பிற்குப் பின் உயர்க்கல்வி என்ன படிக்கலாம் ? எனும் அறிவுரை வேண்டி வெளிநாட்டிலிருக்கும் உன் சகோதர சகோதரிக்கு மடல் எழுதுக
(உனது முகவரி: க.கலைவாணன்/க.கலைவாணி,32.பாரதிதாசன் வீதி, சென்னை 600028)
இ) நூலகத்தின் பயன் கள் குறித்து உனது தோழன்/தோழிக்கு மின்னஞ்சல் அனுப்புக
உனது மின்னஞ்சல் முகவரி : மதி2008@ஜிமெயில்.காம்

**15.குறிப்புகளைக் கொண்டு ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வரைக 6**
அ) செல்வம்சேமிப்பும் - செலவும் –திட்டமிட்டசேமிப்புகளில் முதலீடு- நம்பிக்கை தரும் அரசு சேமிப்புத் திட்டங்கள்- அதிகவருமானம் தருவதாக ஆசைகாட்படுத்தும் தனியார் சேமிப்புத் திட்டங்களில் எச்சரிக்கையுடன் இருத்தல்- எதிர்காலத்தில் வளமாக வாழ வழிவகுத்தல்
ஆ) முதியவர்கள் சமுதயத்தின் ஆணிவேர் – தற்காலக் குடும்பச்சூழல்- சகிப்புத்தன்மை குறைந்துவ ரும் சமுதாயம் – முதியோர் இல்லங்கள் பெருகுதல்-பாசத்திற்கு ஏங்கும் முதியோர் – நேசக்கரம் நீட்ட வேண்டிய இளைய சமுதாயம் – சமுதாயக் கொள்கையில் புரட்சிகாணல்.
இ) இந்தியாவின்குடியாட்சிக்கொள்கை - எம்மதமும்சம்மதம் -மதவெறிக்கு மக்கள்செவிசாய்த்தல் –வன்முறை-உயிர் –பொருட்சேதம் - விழிப்புணர்வுவிவேகம் - ஒன்றுபட்டவாழ்க்கை